பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 18 வியாழக்கிழமை (28-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 32

# வலிகாமம் பகுதியில் பல இடங்களில் படையினர் மீது புலிகள் தாக்குதல்!

## புத்தூரில் நேற்று கடும் மோதல்

கொழும்பு, டிசம்பர் 28

வலிகாமம் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பல இடங்களில் நேற்று விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

நாவாந்துறை, புத்தூர், பன்னாலை ஆகிய இடங்களில் படையினரின் முன்னணி நிலைகளுக்குள் ஊடுருவிச் சென்று புலிகள் இத் தாக்குதல்களை நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினரின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் விடுதலைப் புலிகள் இத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

நாவாந்துறைப் பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் படையினரின் காவலரண் ஒன்றை நெருங்கிச் சென்று விடுதலைப் புலிகள் கிரனேட் வீசித் தாக்கினர்.

அப்பகுதியில் சிலரது நடமாட்டத்தை அவதானித்த படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டதாகவும் —

அச்சமயம் படையினரை நெருங்கி வந்து உரையாடிய அவர்கள் திடீரென காவலரண் மீது கிரனேற் தாக்குதல்

(6 ஆம் பக்கம் பார்க்கா)

### அம்பாறையில் மோதல்

சாவகச்சேரி, டிச. 26

அம்பாறையில் காக்காச்சி வெட்டைப் பகுதியில் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. படையினருக்கு ஏற்பட்ட சேதம் பற்றி தெரியவரவில்லை.

### லிங்க நகரில் துப்பாக்கிச் சூடு

சாவகச்சேரி, டிச. 28

திருகோணமலையில் லிங்க நகரில் ஊர்காவல் படையினர் குடியிருப்புக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### ஒய்வூதியம் நிலுவையுடன்

கொழும்பு, டிச. 28

ஓய்வூதியர்களுக்கு அடுத்த மாத ஓய்வூதியத்துடன் ஆயிரத்து 560 ரூபா நிலுவைத் தொகையும் கிடைக்கவிருக்கிறது

கடந்தமாதம் 16ஆம் திகதி 18/94 (III) ஆம் இலக்க சுற்றறிக்கைக்கிணங்க 1-1-92 முதல் 30-6-92 கால பகுதிக்குரிய — 6 மாதத்துக்குரிய — 260 ரூபா மாதாந்தப்படியின் நிலுவைத் தொகையான ஆயிரத்து 560 ரூபாவே ஓய்வூதியர்களுக்கு கிடைக்கவிருக்கிறது.

இந்தக் கொடுப்பனவுக்கான பணிப்புரையை ஒய்வூதியப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் படகுச் சேவை புதிய நடைமுறை அறிவிப்பு

சாவகச்சேரி, டிச. 28

வலிகாமம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வன்னி சென்று குடியிருக்க விரும்பும் மக்களின் கிளாலி பயணத்துக்கு இதுவரை இருந்து வந்த நடைமுறையில் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து மாற்றங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாக அரசியல்துறை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசியல்துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இதுவரை காலமாக வன்னிக்கான போக்கு வரத்துச் சேவை முற்றிலும் இலவசமாகவே நடைபெற்று வந்தது. வருகின்ற முதலாம் திகதியிலிருந்து இந்த நடைமுறையில் சில

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு இடம்பெயர்ந்த ஆசிரியர் தற்காலிகமாக கடமையாற்ற அனுமதி

கொழும்பு, டிச. 28

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்துள்ள அரசாங்க ஆசிரியர்களுக்கு தற்போது தங்கியுள்ள பகுதியில் தற்காலிக நியமனம் வழங்கப்படும் என்று வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. கே. தியாகராசா தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த இடத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயில இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வசதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வி பயில விரும்பும் மாணவரிடம் விடுகைப் பத்திரம் கோரப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## இடம் பெயர்ந்த அரச ஊழியர் குறித்து அமைச்சரவைநேற்று ஆராயவிருந்தது

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த அரசஊழியர்கள், பொது மக்கள் தொடர்பான விவரங்கள் நேற்று நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட இருந்ததாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அங்கு வந்து குடியேறுமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருந்த போதும் இடம்பெயர்ந்த மக்கள் எவருமே இதுவரை மீளக் குடியமர முன்வரவில்லை.

இந் நிலையில் அடுத்த நடவடிக்கை என்ன என்பது குறித்து நேற்றைய அமைச்சரவைக்கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

### ராணுவ கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு நேரடியாக நிதி இல்லை

சாவகச்சேரி, டிச. 28

யாழ். மாவட்டம் உட்பட இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் செயற்படும் பிரதேச செயலகங்களுக்கு இனி நேரடியாக நிதி அனுப்பப்பட மாட்டாது என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களுக்கும்—

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலகங்களுக்கும்—

மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலகங்களுக்கும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி கரையோரம் நேற்று பீரங்கித் தாக்குதல்

வடமராட்சி, டிச. 28

காங்கேசன்துறையில் இருந்து வந்த கடற்படைப் படகுகளில் இருந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் வடமராட்சி கரையோரப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்படையினர் நடத்திய பீரங்கி மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களால் நேற்றுக் காலை கரையோரப் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

கரையோரக் கடற்பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இடைநடுவில் தொழிலைக் கைவிட்டுக் கரை திரும்பினர்.

தொண்டமனாறு தொடக்கம் இன்பருட்டி வரையான கரையோரப் பகுதிகள் மீதே தொடர்ச்சியாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படைத் தாய்க் கப்பல் ஒன்றுக்குப் பாதுகாப்பளித்து வந்த பீரங்கிப் படகுகளில் இருந்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வந்தது.

(ஐ. 1[illegible])

## அந்தமான் கடல் பகுதியில் புலிகளின் பிரதான தளம்?

### தாய்லாந்திடம் இலங்கை தகவல் கோரியது

கொழும்பு, டிச. 28

தாய்லாந்துக்கு அருகில் அந்தமான் கடலில் உள்ள தீவு ஒன்றில் விடுதலைப்புலிகள் செயற்படுகிறார்களா? என்பது குறித்து விசாரித்து அறியுமாறு இலங்கை அரசு தாய்லாந்து அரசைக் கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் பரிவர்த்தனை உட்பட [illegible]களுக்கு இந்தத் தீவை தளமாகக் கொண்டு இயங்குவதாகவும்—

அது குறித்து விசாரணை செய்யுமாறும் — இலங்கை அரசு தாய்லாந்து அரசைக் கோரி இருந்தது.

விடுதலைப் புலிகள் அந்த தீவில் செயற்படுவதற்கான தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தாய்லாந்து பதில் அளித்திருந்தது.

அந்தத் தீவில் நடத்தப்பட்ட தேடுதல் மற்றும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையை அடுத்த வாரம் பாங்கொக் வரவுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சரிடம் கையளிப்பது என தாய்லாந்து பிரதி இராணுவத் தளபதி ரத்ன செலன் என் யக்கூன் தெரிவித்துள்ளார். (இ-3-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

### இரட்சிப்பின் சத்தம் சபை

நத்தார் புதுவருட வாழ்த்துக்களை சகல ஆவிக்குரிய சபைகளுக்கும் தெரிவிக்கிறது.

31- 12- 95 ஞாயிறு இரவு 10 மணிக்கு விழிப்பு இரவு ஆராதனை ஆரம்பமாகி 01- 01- 96 திங்கள் அதிகாலை திருப்பந்தி ஆராதனையுடன் முடிவடையும் என்பதை அறியத்தருகின்றோம். கீழ்வரும் விலாசத்தில் ஆராதனை நடை பெறும்.

சபைப்போதகர்
எஸ். எம். ஸ்ரீபன்

உதயசூரியன் வீதி.
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

(C/2922)

# முன்னணி காவலரண்கள் ஊடாகவே பொருள்கள் வடக்கே கடத்தல்!

## இராணுவ - பொலீஸ் அதிகாரிகளும் தொடர்பு

கொழும்பு, டிச. 28

வட பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்ட — பெறுமதி மிக்க — பல பொருள்கள் வவுனியாவில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண்கள் ஊடாக — துருப்பினரின் உதவியுடன் வட பகுதிககு கடத்தப்பட்டிருப்பது அம்பலமாகியிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

வவுனியா பம்பைமடுப் பகுதியூடாக தடைசெய்யப்பட்ட பொருள்கள் வடக்கே கடத்தப்பட்டசம்பவங்களுடன் சில இராணுவ, பொலீஸ் அதிகாரிகளுக்குத் தொடர்பு இருந்தது தெரிய வந்திருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த இரண்டுவாரகாலத்தில் 3 தடவைகள் அந்தப் பகுதியூடாக தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் —

ஒரு கோடியே 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கடத்தலுக்கு அப்பகுதியில் பணியாற்றிய சில பொலீஸார், மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு வாகனத்தில் — பத்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய தடை செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் பஜிரோ வாகனத்தின் உதிரிப் பாகங்கள், வாகன பற்றரிகள், ''ரைமிங் செயின்'', படச் சுருள்கள், ''காஸ் லைட்டர்கள்' போன்றவை கடத்துவதற்காக எடுத்து வரப்பட்ட போது பிடிபட்டதாகவும் —

இச்சம்பவம் தொடர்பாக ஐந்து தமிழ் பொதுமக்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் வாகனமும் வவுனியா பொலீஸில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட வீடியோ டெக்குகள், பென் டோர்ச் பற்றரிகள், வீடியோ கமராக்கள், கலர் படச்சுருள் போன்ற — பல லட்சம் ரூபா பெறுமதியுடைய— பொருள்கள் வவுனியாவில் படையினரின் கைவிடப்பட்ட முன்னணிக் காவலரண் ஒன்றிலிருந்து கடந்த வாரம் மீட்கப்பட்டதை அடுத்து ஏழு தமிழ் வர்த்தகர்கள் மற்றும் ஒரு ரிசேர்வ் கான்ஸ்டபிள் ஆகியோரை வவுனியா பொலீஸார் கைது செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3-6)

## ஊழியர் சம்பளம் இடைநிறுத்தம்?

கொழும்பு, டிச. 28

யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியுள்ள அரச ஊழியர்களின் சம்பளத்தை அரசு இடைநிறுத்தியுள்ளதாக கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இதனால் அங்கு தங்கியுள்ள யாழ். மாவட்ட அரச அதிகாரிகள் பெரும் கஷ்டநிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

# இலவச உலர் உணவு விநியோகம்

*10 ஆது சுற்று முத்திரை - 29 பி., 30 ஏ, 30 பி புள்ளி (6 வாரங்கள்)*

மேற்படி புள்ளிகளுக்குரிய உலர் உணவுப் பொருள்களை 1995-12-28 ஆம் திகதி தொடக்கம் பின்வரும் கிளைநிலையங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். எமது பகுதியில் எமது சங்கத்திற்கு இணைக்கப்பட்ட நிவாரண முத்திரைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

தலைமைக் காரியாலயம் — மோகனதாஸ் சனசமூக நிலையக் கட்டடம்
கிராமிய வங்கி. — மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி,
மொத்த நிலையம். — நுணாவில் கனகம்புளியடி வீதி, மட்டுவில் சாவகச்சேரி.

| வலயம். | கிளை இல. | கிளை நிலைய அமைவிடம் |
|---|---|---|
| கைதடி. | 01. | கைதடி மத்தி. |
| கைதடி. | 04. | மறவன்புலோ. |
| கைதடி. | 16. | மறவன்புலோ கோவிலடி |
| மட்டுவில். | 02. | மட்டுவில் மத்தி. |
| மட்டுவில். | 13. | மட்டுவில் கிழக்கு. |
| மட்டுவில். | 03. | மட்டுவில் தெற்கு, |
| மட்டுவில். | 09. | சரசாலை |
| மட்டுவில். | 08. | கல்வயல். |
| வரணி. | 10. | மந்துவில். |
| வரணி. | 14. | வரணி சந்தி· |
| சாவகச்சேரி. | 07. | பெருங்குளம் சந்தி. |
| சாவகச்சேரி. | 17. | சாவகச்சேரி. |
| கொடிகாமம். | 06. | கொடிகாமம் சந்தி |
| கொடிகாமம். | 14. | உசன் சந்தி. |
| கொடிகாமம் சாவகச்சேரி மட்டுவில். — | 05. | மீசாலை புத்தூர் சந்தி. |
| உதவி அரச அதிபர் பிரிவு. | | |
| கரவெட்டி. | 12. | நெல்லியடி. |
| பருத்தித்துறை. | 11. | மந்திகை. |
| பருத்தித்துறை. | 18. | பருத்தித்துறை. |

பொது முகாமையாளர்.
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

(சி-3093)

## றாஜு ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம்


தற்பொழுது தனங்கிழப்பு வீதி சாவகச்சேரி சந்தியில் இயங்குகின்றது. நாணயங்கள் மாற்றி கொடுக்கப்படும்.

★ எமது புதுவருட நல்வாழ்த்துகள் ★

(39851)

## அந்தியேட்டி அழைப்பு


45 ஆம் நாள் நினைவலைகள்



### வீரவேங்கை பாலன்

தாயின் மடியில்: 13-11-1980
தாயக மண்ணில்: 14-11-1995

96 ஆம் நாள் நினைவலைகள்



### லெப்டினன்ட் கஜன்

தாயின் மடியில்: 02-10-1976
தாயக மண்ணில்: 03-10-1995

இதயத் தாமரைகள் பாலன் — கஜனே!
அல்லையம்பதியில் பூத்தீர்கள் அன்னைமடி இன்றி தந்தை மடியில் வளர்ந்தீர்கள்
பாலகர் வயதிலேயே பகைவரை அழிக்கவென புலிகள் பாசறை சேர்ந்தீர்களே
தலைவர் வழியில் நின்று தலைவர் உறுதியின் வழி சென்று
யாழ். மண்ணை ஆக்கிரமித்த பகை அரக்கரை இருபாலையிலும்
அச்சுவேலியிலும் அழித்து — நீங்களும் காவிய
நாயகர் ஆகி விட்டீர்களே!! உங்கள் கல்லறைகளும்
கருத்தரித்து மீண்டும் எமது வீட்டில் உதிப்பீர்கள்
நீங்கள் இருவரும் விழுதாகி விட்டீர்கள் நாங்கள் அழுதோயவில்லை
இவரின் ஆத்மா சாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்.

*இவர்களுடன் வீரச்சாவு எய்திய அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.*

03-10-95 ஆம் திகதியும் 14-11-95 ஆம் திகதியும் வீரச்சாவைத் தழுவி எம் மண்ணின் விடுதலைக்கு வித்தாகிய லெப்டினன்ட் கஜன், வீரவேங்கை பாலன் ஆகியோரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் சக போராளிகள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (28-12-95) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
அல்லையம்பதி, துன்னாலை.

தகவல்:
சி. சிறிகுமார் [அண்ணன்]
(தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
பசுமை பகுதி — நெல்லியடி)

(3712)

### அஜந்தாஸ் ஸ்ரூடியோ

உடன் தேவைக்கு படம் பிடிக்க

# அஜந்தாஸ் ஸ்ரூடியோ

பரு — யாழ் பிரதான வீதியில்
மாலு சந்திக்கு அண்மையில்
(பாஸ் செயலகத்தின் அருகாமையில்)

அடையாள அட்டை, பாஸ்போட், படம் பெரிதாக்கிக் கொள்ள, மற்றும் கலர்ப்படங்கள் என்பன எமது சேவையில் உள்ளன.

(சி-3096)

### 45 ஆம் நாள்

## நினைவலைகள்

### கப்டன் குமரன்

(வீமன் யோகராஜா)
(பிரம்படி ஒழுங்கை, மந்துவில் கிழக்கு, கொடிகாமம்)

### விண்ணகச்செல்வன் (தம்பி)

(பரமசாமி பகீரதன்
(சன்னாசிப் பரந்தன், நெடுங்கேணி)

அந்நியன் படையழித்த மாவீரரே!
மண் மானம் காத்த தியாகங்களே!
மறப் புலியாய் ஆற்றலுடன் போரிட்ட
தம்பி, குமரனே!
இலை மறைகாய் போல எம்முள் தோன்றினாயே!
தேற்ற மறைந்தனையோ!
எம்மை விட்டு எங்கு அகன்றீர்களோ!
நீங்கள் போட்ட ஆயுதத்தை ஏந்த
உம் வழி செல்கின்றோம்.

— சேரன் ஊழியர்கள்

(சி/3095)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுணதீவில் படையினர் அகோர ஷெல் தாக்குதல்!

## தாயும் மகனும் கொல்லப்பட்டனர்

மட்டக்களப்பு, டிச. 28

மட்டக்களப்பு வவுணதீவில் மக்கள் குடியிருப்புக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், மகனும் கொல்லப்பட்டனர்.

வைரமுத்து அம்பிகா (26 வயது) அவரது மகன் வைரமுத்து கிருபாகரன் (3 வயது) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

இதேவேளை முல்லைத்தீவில் மக்கள் குடியிருப்புகள் மீதும் நேற்று முன்தினம் படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர். விமானக் குண்டுவீச்சுக்சளும் அங்கு நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களினால் மக்கள் குடியிருப்புக்கள் சேதமடைந்தன, கால்நடைகள் இறந்தன, மரங்கள் முறிந்து விழுந்தன.

விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் தொடர்பான மேலதிக விவரங்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

(இ-7)

## மாதகல், பண்டத்தரிப்பில் இளவயதினர்தடுத்துவைப்பு

சாவகச்சேரி, டிச. 28

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின்போது படையினரிடம் சிக்கிய இளம் வயதினர் மாதகல், பண்டத்தரிப்புப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே படையினரிடம் சிக்கியவர்களில் சுமார் 300 பேர் இப் பகுதிகளிலேயே வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீரச்சாவு

கடந்த 20 ஆம் திகதி வலிகாமத்தில் இராணுவத்துடனான நேரடி மோதல் ஒன்றில் 2 ஆம் லெப்டினன்ட் அழகு (லக்சுமணன் ராஜகரன் — புன்னாலைக்கட்டுவன்) வீரமரணமடைந்தார்.

## தமிழீழ வைப்பக தேர்வு

சாவகச்சேரி, டிச. 28

தமிழீழ வைப்பகத்தின் இளநிலை எழுதுநர் அல்லது உதவிக்காசாளர் பதவிக்கான தேர்வு இம்மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணி முதல் நண்பகல் 12-00மணி வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி அட்டையை ஏற்கனவே பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் தேர்வு மண்டபத்தில் காலை 9-00 மணிக்கு பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

பரீட்சார்த்திகள் தேர்வுக்குச் சமுகமளிக்கும்போது தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களைக் கொண்டு வரவேண்டும் என்றும் தமிழீழ வைப்பகப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு மேலதிகமாக 2 வார்ட்டுகள்

### அமைக்கப்பட்டு வருகின்றன

வலிகாமப் பகுதிகளிலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ள மக்களால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வார்ட்டுகளிலும், வெளிநோயாளர் பிரிவிலும் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அடுத்து அங்கு இரு நிரந்தர வார்ட்டுக்கள் மேலதிகமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொன்றும் 20 படுக்கைகளைக்கொண்ட 70அடி நீளம் 19அடிஅகலமானஇந்தவார்ட்டுகளை அமைப்பதற்கான நிதி கிளிநொச்சி அரச அதிபரின் பன்முக வரவுச் செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்பது லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இந்த வார்ட்டுகள், விரைவில் பாவனைக்காகத் திறக்கப்படும் என தெரியவருகிறது.

இதேவேளை வெளிநோயாளர் அமர்ந்து சிகிச்சை பெறுவதற்கு வசதியாக தற்காலிக மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது' (இ-7)

### கொழும்பில் கைதாகும் தமிழர்கள்

## ஆண்-பெண் வேறுபாடின்றி ஒரே அறையில் அடைக்கப்படுகின்றனர்!

கொழும்பு, டிச. 28

கொழும்பில் கைதாகும் தமிழர்கள் ஆண் — பெண் வேறுபாடின்றி அனைவரும் ஒரே அறையில் அடைத்து வைக்கப்படுகின்றனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் தமிழர்கள் கோவிலுக்குச் செல்வதும், பெண்கள் நெற்றிப் பொட்டுடன் செல்வதும் தற்போது சிரமமான காரியமாக இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் பொலீஸாரால் கொண்டு செல்லப்படும் தமிழர்கள் ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி ஒரே அறையில் கும்பலாக அடைத்து வைக்கப்படுகின்றனர் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

விசாரணை என்ற பெயரில் கீழ்த்தரமான கேள்விகள் அங்கு கேட்கப்படுகின்றன.

தேசிய அடையாள அட்டையை மட்டுமன்றி தேவைப்படும் சகலவிதமான ஆவணங்களைச் சமர்ப்பித்தாலும்கூட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு அடைக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

மூன்றுமாதக் குழந்தை ஒன்றின் தாயார் கூட கைதுசெய்யப்பட்டு பொலீஸ் காவலில் பல நாட்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தார் என்றும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (இ-7)

## தாண்டிக்குளம் வரையான வடபகுதி ரயில் சேவை விஸ்தரிக்கப்படுமாம்

### பிரதி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு டிச. 28

தாண்டிக்குளம் வரையான வடபகுதிக்கான ரயில் சேவை மேலும் விஸ்தரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கான செயலணிக் குழுவின் பணிப்புரை கிடைத்ததும் ரயில் பாதை விஸ்தரிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து, மகளிர் விவகார பிரதியமைச்சர் றெஜி றணதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கே போக்குவரத்துச் சேவையை பூர்த்தி செய்ய 60 புதிய பஸ்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும்—

வடபகுதிக்கான போக்குவரத்துச் சேவையை ஒழுங்காக்குவதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தயாராக இருப்பதாகவும்—

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதியிடமிருந்து எதிர் பார்த்திருப்பதாகவும்— அவர் மேலும் தெரிவித்தார்.

வடபகுதியில் போக்குவரத்துச் சேவை தற்போது எவ்விதம் இருப்பினும், அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கான மொத்த மாதாந்தக் கொடுப்பனவாக 45 லட்சம் ரூபா அனுப்பி வைக்கப்படுகிறது. கோண்டாவில், பருத்தித்துறை, கிளிநொச்சி, காரைநகர், மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஆறு டிப்போக்களில் கடமையாற்றும் 967 ஊழியருக்கென இந்தத் தொகைப் பணம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது இது உண்மையில் ஊழியர்களைத்தான் சென்றடைகிறதா என்பது ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஊர் முற்றம்

இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர், கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் ரயில் சேவை நடந்த போது...

கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தில் இரவு ஏழு மணிக்கு யாழ்ப்பாணத்துக்கென ரயில் ஏறினால் அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கு யாழ், ரயில் நிலையத்தில் வந்திறங்கலாம். அங்கு காத்து நிற்கும் பஸ் வண்டிகளில் சொந்த ஊருக்குப் போகும் பஸ்ஸில் ஏறிக்கொண்டால், ஆதவன் உதித்து எழுவதற்கு முன்னா வீட்டு முற்றத்தில் பயணப் பொதியுடன் நிற்கலாம்.

உடனே சென்று உடைகளைக் கழற்றி மாற்றவும் அம்மா சையில் கொண்டு வந்து கொடுக்கும் கோப்பியுடன் ரயில் பிரயாணக் களைப்புத் தீர்ந்துவிடும்.

மருதானை ரயில் நிலையத்துக்கே சென்று ''கோணர் சீற்'' பிடித்து வந்த வேளைகளில் பிரயாணக் களைப்பே இருக்காது. சாதாரண கட்டணத்தைவிட சற்று அதிகமாகச் செலுத்தி, கோட்டை ரயில் நிலையத்தில் தெரிந்தவர்களைக் கொண்டு அல்லது கியூவில் நின்று உறங்கலிருக்கை பதிவு செய்து பயணம் செய்யும் போது, பிரயாணக் களைப்பு என்பதே இருக்காது. நிம்மதியாக நித்திரை செய்து வந்து ஊர் சேர்ந்த நாளே எவ்வித பயண அலுப்புமின்றி பார்க்க வேண்டிய அலுவல்களை உடனடியாகக் கவனிக்க முடிந்தது.

அது அந்தக் காலம். மீண்டுவருமா? கொழும்பு— யாழ்ப்பாணம் பிரயாணம் செய்யக்கூடிய அரசியல் சூழ்நிலை உருவாகுமா? வவுனியாவில் இராணுவ சோதனை, தாண்டிக்குளத்தைத் தாண்டவேண்டிய சிரமம் எதுவுமே இல்லாத — யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான — இலகுவான பயணம் செய்யமுடியுமா என்பது கேள்விக்குரியவையே!

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக அக்கரையில் உள்ள இறங்குதுறையில் படகு ஏறுவதற்காக அங்கு அமைக்கப்பட்டுள்ள கொட்டகையில், கொட்டும் பனியில் தோய்ந்துகொண்டிருந்த வேளையிலேயே அந்தக் காலத்துக் கொழும்புப் பயண நினைவுகள் நிழலாடின.

அவை, இந்தக் காலத்துக் கிளாலிப் பயணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க மனதைத் தூண்டின.

மனதைக் கிளறிவிட்டால் அது சும்மாவா இருக்கும்? அந்தக் காலத்து யாழ்ப்பாணம் — கிளிநொச்சிப் பயணத்தையும் இன்றைய பயணத்தோடு பல அம்சங்களிலும் ஒப்பிட்டுத் துளாவியது.

யாழ்ப்பாணத்துக்கும் — கிளிநொச்சிக்கும் இடையில் உள்ள தூரம் நாற்பத்தைந்து மைல்கள். இ. போ. சபையின் கடுகதி பஸ்ஸில் யாழ்ப்பாணத்தில் ஏறினால் ஒன்றரை மணிநேரத்தில் கிளிநொச்சியில் இறங்கலாம்.

அங்கிருந்து கமங்களுக்கு — குடியேற்றக் கிராமங்களுக்கு — பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு இ.போ.ச பஸ்களுடன் தனியார் வாகனங்கள் — வான்கள் — போட்டி போட்டுக் கொண்டு நிற்கும்.

ஏதாவது ஒன்றில் தொற்றினால், தூரத்துக்கு ஏற்றவாறு அரை மணித்தியாலத்திலோ, ஒருமணித்தியாலத்திலோ உரிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். அது அந்தக்காலம்,

இப்போது ..

மாலை நான்கு மணிக்கு கிளிநொச்சிப் பட்டினத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் நல்லூரை நோக்கிப் புறப்பட்டு, அடுத்த நாள் காலை ஆறு மணிக்குத்தான், யாழ்ப்பாணம், இல்லை இல்லை; சாவகச்சேரி வந்தடைய முடிந்தது! பிரயாணக் களைப்பும், அலுப்பும் தீர இரண்டு நாள்கள் சென்றன.

காலம் மாறும்போது கஷ்டங்கள் வரும். அதுவும் விடுதலைக்காகப் போராடும்போது வாழ்க்கையே வெறுத்துப்போகும் அளவுக்கு கஷ்டங்கள் பல்கிப் பெருகும். நாளாந்தம் ஒன்றுக்கு மேல் மற்றதாக அடுத்தடுத்து, அடுக்கடுக்காக வந்து குவிந்து விரக்தி அடையச் செய்யும். அவற்றை எல்லாம் எதிர்கொண்டு. தாங்கி நின்று சமாளிக்கக்கூடிய சக்தி எமது மக்களுக்கு வந்துவிட்டது என்பதனை கிளாலியால் பயணம் செய்வதற்கு கூடி நின்ற மக்களின் எண்ணிக்கை புலப்படுத்தியது.

அந்தக் காலத்தில் ரயிலில் பிரயாணம் செய்த வயதானவர்கள் தொடக்கம், உண்மையான ரயிலை நேரில் காணாத சிறுவர்கள் வரை, அக்கரையிலும் இக்கரையிலுமாக சனக் கூட்டம் அலை மோதுகிறது. குளிரையும், தாமதத்தையும் போக்குவரத்தில் உள்ள பலவகை குறைபாடுகளையும் பொருட்படுத்தாது அலையலையாக அலைகளின்மேல் பயணம் செய்கிறார்கள்.

இப்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் மத்தியிலும் பிற்பகல் தொடக்கம் விடிய விடிய 'ரேண்' வைத்து இயந்திரப்படகுகள் தொடுகைகளுடன் பயணிகளை ஏற்றி இறக்குகின்றன.

கிளாலி நீரேரியால் பயணம் செய்வதை சந்திரிகா அரசாங்கம்தடைசெய்துவிட்டது. ஆனால் அதனை மக்கள் பொருட்படுத்தவில்லை. வன்னி நோக்கி மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த வண்ணமே உள்ளனர்.

வன்னியில் ஊர்ப் பெயர்கள் இப்போது யாழ்ப்பாணத்ததவருக்கும் தண்ணீர் பட்டபாடு! குளங்களின் பெயர்களும் அத்துப்படி! முறிப்புக்குளம், இயங்கன் குளம், என்று வாய்க்கு வாய் கதைக்கிறார்கள்

சுதந்திரம சும்மா வராது அதன் பொருட்டு பல கஷ்டங்களையும் மாற்றங்களையும் அனுபவித்தே ஆகவேண்டும் என்பதனை எங்கள் மக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். அந்தக் காலத்து சுகவாழ்க்கையைத் துறந்துதான் ஆகவேண்டும் என்பதனையும் விளங்கிக் கொண்டுள்ளனர்.

நிலைமைக்கு ஏற்பத் தங்களை, தங்கள் இயல்புகளை மாற்றிக் கொள்வதில் தமிழர்கள் கெட்டிக்காரர்கள்.

அதனால் விடுதலை அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்று நம்ப இடமுண்டு.

— மயூரம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### சுடரொளி

சுடரொளி இந்து நாட்காட்டி (திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்) விலை 70/- மட்டுமே வெளியீடு கல்வயல் இந்து இளைஞர் மன்றம். தொடர்பு: திருக்கணித நிலையம் மட்டுவில். (39585)

### விற்பனைக்கு

பாவனையில் உள்ள HONDA 70, HONDA CAREN (Ladies) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. திருநாவுக்கரசு இல: 111, சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி. (மக்கள் வங்கி முன்பாக) (39710)


# உறவினருடன் தங்கி உள்ளோர் நிவாரணம் கிடையாது அதிருப்தி

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் மற்றும் தனியாக குடிசை அமைத்து தங்கியிருப்பவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி தமக்குக் கிடையாததையிட்டு அதிருப்தி தெரிவிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இடம்பெயர்ந்து வந்த குடும்பங்களில், முகாம்களில் தங்கியிருக்கின்ற குடும்பங்களுக்கு மட்டுமே படுக்கை விரிப்பு, பாய், பிளாஸ்ரிக் வாளி ஆகிய பொருள்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முகாம்களில் இடம் இல்லாமையினாலேயே தாம் நண்பர்கள், உறவினர்களின் காணிகளில் சிறு குடிசைகள் அமைத்து இருப்பதாகத் தெரிவித்து, தமக்கும் இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-175)

# விமானம் மூலம் அழைத்துசெல்லவும் அரசாங்கம் தயாராக உள்ளதாம்

## ஆனால் எவரும் சம்மதிக்கிறார்கள் இல்லை

கொழும்பு டிச. 28

யாழ். நகரில் உள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில், கடமையாற்ற விரும்பும் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிகள் மருந்தாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஈடுபட்டுள்ளார். ஆனால் பலன் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நகரில் உள்ள யாழ். போதனா வைத்திய சாலையில் பணியாற்ற விரும்பும் சுகாதார சேவையில் உள்ள சகல தரங்களையும் சேர்ந்த ஊழியர்களின் விவரங்களையும் உடனடியாக சேகரித்து அனுப்புமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் சகல மாகாண மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஒன்றில் கேட்டுள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்ற விரும்பும் வைத்திய நிபுணர்கள் டாக்டர்கள் தாதிகள் மருந்தாளர்கள் சிற்றூழியர்கள் உட்பட சகல சுகாதார சேவையிலுள்ள ஊழியர்களுக்கும் இலவச உணவு, தங்குமிட வசதி, விசேட கொடுப்பனவுகள் ஆகியன வழங்கப்படும் என்றும்—

தற்போது சேவையாற்றும் இடத்திலிருந்து யாழ் நகரில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலை வரை இலவச போக்குவரத்து ஏற்பாடும் செய்யப்படும் என்றும்—விசேட விமான சேவையும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் என்றும்—

கடமையாற்ற விரும்புபவர்கள் ஆகக் குறைந்தது இரு வாரங்களுக்கு கடமையாற்ற வேண்டுமென்றும்—அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)


# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26 — 10 — 1910

மறைவு: 08 — 01 — 1995

## திருமதி வள்ளியம்மை தம்பிஐயா

### திதி: 28-12-1995

தம்பிஐயா வள்ளியம்மை தாரணியை நீத்தகன்று உம்பருலகுற்றோராண்டோடியதே — இம்பர் யுவவாண்டு மார்கழிச் சப்தமியே ஆண்டுத் திவசமாய்த் தேர்ந்த தினம்.''

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர் விட்டு எரிந்த திருவிளக்கே! திடீரென அணைந்த ஒளிவிளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு சென்றாலும் ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவலைகள் எங்கள் மனதுக்குள் மாறாது தெய்வமாக நின்று எங்களை வழிநடத்த வேண்டுகிறோம்.

உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் மாறாது, மறையாது.

உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்:

மகன்மார், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
136/4, நாவலர் வீதி,
வண்ணார்பண்ணை.

த. விஜயபாலன்,
மே/பா. எஸ். தியாகராஜா,
191 ஆம் கட்டையடி,
கைதடி, நுணாவில். (39588)


## நிற உடைகள் எடுத்துவர தடை

வவுனியா, டிச. 28

தாண்டிக் குளத்தில் படையினர் கறுப்பு, நீலம், பச்சை நிற உடைகளை வடக்கே எடுத்துவருவதற்கும் தடை விதித்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றினால் ஏற்கனவே வடக்குக்கு அனுப்பப்பட்ட இவ்வாறான உடைகள் வவுனியாவில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைப் பயன்பாட்டுக்கு உதவக்கூடிய இந்த நிறங்களைக் கொண்ட உடைகளையோ அல்லது இந்த நிறங்கள் கலந்த வர்ணங்கள் உடைய ரீசேட்டுக்கள், சேட்டுக்கள், பாவாடைகள், காற்சட்டை என்பவற்றையோ படையினர் வடக்கே கொண்டு செல்லத் தடை விதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கழிவுகளால் துர்நாற்றம்

கரணவாய், டிச. 28

முள்ளி, கறுக்காய் பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடுகளின் கழிவுகள் கொட்டப்படுவதால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை — கொடிகாமம் வீதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதியில் இது அமைந்திருப்பதால் சுகாதாரத்துக்கு பெரும் கேடு ஏற்படும் என்றும்—

தொற்றுநோய்கள் பரவலாம் என்றும்— அஞ்சப்படுகிறது. (இ-173-80)

## ஐரோப்பிய ஒன்றிய உதவி

சாவகச்சேரி, டிச. 28

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் புனர் வாழ்வுக்கென ஐரோப்பிய ஒன்றியம் பத்துக் கோடியே 39 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தப்பணம் இடம் பெயர்ந்து அவதியுறும் மக்களுக்கு உணவு, உறைவிடம், குடிதண்ணீர் மருத்துவத் தேவைகளுக்கே செலவிடப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதநேய அமைப்பான 'நேற்றோ' கூறியுள்ளது. (இ-7)


# உடன் சந்திக்கவும்

கைலாசபிள்ளையார் கோவில், நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **மணி ஐயா** அவர்கள் உடன் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

தி. தில்லைநாதன்,
வவுனியா.

(சி/2921)

# போத்தல்கள் தேவை

பின்வரும் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

★ ஹொர்லிக்ஸ்/ வீவா (பெரிது, மூடியுடன்) 5/-
★ ஹொர்லிக்ஸ்/ வீவா (பெரிது, மூடியற்றது) 2/50
★ ஜாம் 6/-

இவற்றைப் பின்வரும் இடங்களில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

- கிரியோன் கூல்பார், சாவகச்சேரி.
- ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி.
- வேலவன் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை.
- செல்வராஜா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை.
- சுபாஸ் பேக்ஹவுஸ், நெல்லியடி.

## ரேஸ்ற்லைன் இன்டஸ்றீஸ்

(தனி.) லிமிட்.

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(சி/3089)

சகல அலுவலக, வெளிக்கள
ஊழியர்களுக்கும்,
காப்புறுதிதாரருக்குமான

# அறிவித்தல்

யாழ். பிராந்திய அலுவலகம் 01 — 01 — 1996 தொடக்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்க இருப்பதனால் அன்று காலை 9-00 மணிக்கு முன் அலுவலக ஊழியர்கள் அனைவரும் தவறாது சமுகம் அளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

காப்புறுதிப் பத்திரதாரர் தங்கள் காப்புறுதிக்கான சேவைகளை திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் என அறியத் தருகின்றோம்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன
பதில் பிராந்திய முகாமையாளர்.

யாழ்ப்பாணம்.
27-12-95. (39711)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 07 — 11 — 1926

உதிர்வு: 29 — 12 — 1994

## திருமதி சிசீலியா அருளானந்தர்

எம் இதயங்களில் நிறைந்து நிற்கும் அம்மா, ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு என்றும் எங்கள் உள்ளத்தில் பசுமையாக இருக்கும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''மாசில்லா மாளிகை''
அச்சுவேலி. (39591)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உண்மைத் தோற்றம்

நவீன ரக விமானங்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் கொள்வனவு செய்திருக்கிறது. இந்தப் புதிய விமானங்களில் ஒன்றின் வெள்ளோட்டம், பரீட்சார்த்த ஓட்டம், கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்றிருக்கிறது.

விமானி இன்றியே 'ரிமோட் கொன்ட்ரோல்' முறையில் இயக்கக் கூடிய இந்த நவீன போர் விமானம் இஸ்ரேலில் தயாரிக்கப்பட்டது.

விமானங்களை மட்டுமன்றி நவீன போர்க் கப்பல்களை வாங்குவதிலும் ஸ்ரீலங்கா அரசு தீவிர அக்கறை கொண்டுள்ளது. புதிதாக இரண்டு போர்க் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்காக கடற்படை உயர்மட்டக் குழு ரஷ்யாவுக்குச் சென்றுள்ளது.

அரசாங்கம் வடக்கு – கிழக்கில் நடத்தும் போரில் வான், கடல் பரப்புகளில் அதன் இராணுவப் பலம் குன்றியிருப்பது தெரிந்த ஒன்றே.

வடக்கு — கிழக்குக் கடற்பரப்பில் கடற்புலிகளின் பலம் மேலோங்கி உள்ளது. அரச கடற்படையின் போர்க் கலன்கள் பலவற்றை கடற்புலிகள் நிர்மூலமாக்கியுள்ளனர். அதனால் கடற்படை பலவீனமடைந்த நிலையில் இருப்பதை எவரும் அறிவர்.

வான் பரப்பிலும் அரசாங்கப்படை பலவீனமுற்ற நிலையிலேயே உள்ளது, போர் விமானங்கள் உட்பட பலவற்றை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியதால் போர்க் களத்துக்குத் தேவைப்படும் துருப்புகளையும் ஏனைய விநியோகங்களையும் செய்ய முடியாத நிலையில் அரசு திண்டாடுகிறது.

அரசாங்கம் தான் பெற்ற மிகப்பெரும் வரலாற்று வெற்றியாக வர்ணித்து வரும் யாழ்ப்பாணப் போரின் போது கூட, வான் வழி விநியோகம் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டதாக இப்போது தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆகையால் அரசாங்கம் கப்பல்கள், விமானங்கள் உட்பட்ட போர்த் தளபாடங்களைப் புதிதாகக் கொள்வனவு செய்வது வியப்பானதல்ல.

ஆனால் தனது படை பலத்தையும் ஆயுத பலத்தையும் அதிகரிப்பதில் அரசு காட்டிவரும் அதீத அக்கறை அதன் உண்மைத் தோற்றத்தை வெளிக்காட்டுவதாக உள்ளது.

வடக்கு — கிழக்கில் நடக்கும் போர் தமிழர்களின் விடுதலையுடன், அவர்களின் உரிமைகளுடன் சம்பந்தப்பட்டது. அந்தப் போரை நிறுத்த வேண்டுமானால் — சமாதானத்தைத் தோற்றுவிக்க வேண்டுமானால் — அரசியல் தீர்வு ஒன்றை மட்டுமே அரசு தேட வேண்டும், நாடவேண்டும்.

ஆனால் சந்திரிகா அரசின் இப்போதைய ஒவ்வொரு அசைவும், நகர்வும், நடவடிக்கையும் இராணுவத் தீர்வை நாடுவதாக, தேடுவதாகவே உள்ளது.

அரசு போரைத் தொடரவே, தனது இராணுவ பலத்தை அதிகரிக்கவே, இராணுவத் தீர்வைக் கொண்டு வரவே முடிவு செய்திருக்கிறது.

அதுவே அரசின் உண்மைத் தோற்றம்.

தமிழர்களின் உரிமைகளை வழங்கவோ, விடுதலைக்கு வகை செய்யவோ அது கிஞ்சிற்றும் விரும்பவில்லை.

இதனை உணர்ந்து அதற்கேற்ற மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்பட வேண்டியது தமிழர் கடமை.

## ★ தலைமைப் பதவியிலிருந்து தொண்டா விலகுவார்
## ★ ஆறுமுகம் தொண்டமானுக்கு தலைமைப் பதவி
## ★ பொதுச் செயலாளராக சந்திரசேகரன்

# இ.தொ.கா. - மலையக ம.முன்னணி மற்றும் தொழிற் சங்கங்கள் கூட்டு!

கொழும்பு, டிச. 28

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் மலையக மக்கள் முன்னணியை இணைக்கவும் —

அந்த அணியில் வி பி கணேசனின் தேசிய ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையகத்தில் உள்ள ஏனைய தமிழ் தோட்டத் தொழிற் சங்கங்கள் ஆகியவற்றை இணைக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதி அமைச்சர் பி. சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியை இணைத்து ஓரணியில் செயல்பட இ. தொ. கா தலைமை விரும்புவதாகவும் —

இது தொடர்பான உயர் மட்டப் பேச்சுக்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் —

ஆனால் அப்பேச்சுக்களில் இறுதி முடிவு எதுவும் இன்னும் எட்டப்படவில்லை என்றும் —

இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இ. தொ. கா., மலையக மக்கள் முன்னணி, மற்றும் மலையகத்தில் உள்ள ஏனைய தோட்டத் தொழிற் சங்கங்கள் ஒருகுடையின் கீழ் இணைவதற்கு வசதியாக இ.தொ.கா தலைமைப் பதவியிலிருந்து விலகுவதற்கு அமைச்சர் தொண்டமான் தயார் என்றும் —

தலைமைப் பதவிக்கு தமது பேரனான ஆறுமுகம் தொண்டமானையும், பொதுச் செயலாளர் பதவிக்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பிரதி அமைச்சர் பி. சந்திரசேகரனையும் நியமிக்க தொண்டமான் இணங்கியுள்ளார் என்றும் கூறப்பட்டது.

அத்தகைய சந்தர்ப்பத்தில் இ. தொ. கா. வின் உபதலைவர் பதவி உட்பட முக்கிய பதவிகளை, மேற்படி ஓரணியில் இணைவதற்கு சம்மதிக்கும் தோட்டத் தொழிற் சங்கங்களின் தலைவர்களுக்கு வழங்கவும் தொண்டமான் தயாராக இருக்கின்றார்.

இவ்வாறு தோட்டத் தொழிற் சங்கங்களை ஒன்றிணைத்து இ. தொ. கா. வின் சேவல் சின்னத்துக்குக் கீழ் ஓரணியில் நின்று எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை சந்திக்க அமைச்சர் தொண்டமான் திட்டமிட்டு வருகின்றார் என்றும் —

மலையக மக்களின் தொழிற் சங்கப் பிரச்சினைகளையும் இவ்வாறு ஓரணியில் நின்று வலுவுடன் எதிர்கொள்ள அவர் விரும்புகிறார் என்றும் —

மலையக தொழில் சங்கங்களை ஒன்றிணைக்கும் தமது முயற்சி வெற்றியளிக்கும் என அவர் திடமாக நம்புகிறார் என்றும் —

கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

## அதிபர் சேவை உள்வாங்கல் படிவங்கள் இன்று பெறலாம்

சாவகச்சேரி, டிச. 28

தற்போது அதிபர் சேவையில் உள்ளவர்களை புதிய அதிபர் சேவையினுள் உள்வாங்குவதற்கான விண்ணப்பப் படிவங்களை அதிபர்கள் இன்று பெற்றுக் கொள்ளலாம் எனத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி இன்றைய தினமே பதிவுத் தபாலில் சேர்க்குமாறும் — படிவத்தின் இன்னொரு பிரதியை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

தம்மிடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவ பிரதிகளை சங்கத்தின் நிர்வாகி ஒருவர் கொழும்புக்கு நேரில் எடுத்துச் சென்று கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிப்பார் என்றும் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பகுதியில் வசிக்கும் அதிபர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தற்காலிகப் பணிமனையிலும் (மே/பா. ச. நடேசபிள்ளை, நுணாவில் மேற்கு) —

வடமராட்சிப் பகுதியில் வசிக்கும் அதிபர்கள் திரு. த. பஞ்சலிங்கம் வடமராட்சி மத்திய கல்லூரி, வதிரி என்ற முகவரியிலும் இன்று விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கிளிநொச்சி அரச ஊழியருக்கு இம்மாத சம்பளம் இன்னும் இல்லை

கொழும்பு, டிச. 28

கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரியும் அரச மற்றும் மாகாண சபை ஊழியர்களுக்கான டிசம்பர் மாதச் சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வந்துள்ள நிலையில் —

அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றும் பணியில் மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களே ஈடுபட்டு வருகின்றனர் என்றும்

நத்தார் கழிந்தும் சம்பளம் கிடைக்காததால் சோர்வடைந்துள்ள அவர்களின் சேவை முழுமையாக கிடைக்காது நிவாரணப்பணிகள் ஸ்தம்பிதம் அடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் — கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லை நடராசா தெரிவித்துள்ளார்.

அதேவேளை — கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் அரச ஊழியர்களுக்கான பண்டிகைப் பணம் ஆகியனவும் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இராணுவ ஆட்சி கோரும் ஜனநாயக விரோதிகள்

### ஒழித்துக் கட்ட வாசுதேவ கோரிக்கை

கொழும்பு, டிச. 28

நாடாளுமன்றம் வேண்டாம் மக்களாட்சி வேண்டாம் இராணுவ ஆட்சியே வேண்டும் என்று சிங்களப் பேரினவாதிகள் கூறிவருகின்றனர். இந்த நாட்டில் முளைவிட்டுள்ள ஜனநாயக விரோத சக்திகளை ஒழித்துக்கட்ட வேண்டும் இல்லையெனில் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் தொடர்ந்தும் எதிராகவே செயற்படுவர்.

கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வை அமுல்படுத்த வேண்டும். இனவாதிகள் ஒருபுறம் உருவாகிக் கொண்டிருந்தாலும் தமிழர் பிரச்சினை தீர்வு யோசனைக்கு நாம் நாம் ஆதரவு வழங்கவேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ·3)

## ரூ. 5 கோடி பணத்தை அரச அதிபர் கோருகிறார்

கிளிநொச்சி மாவட்ட அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகளை வழங்க 5 கோடி ரூபாவை வழங்குமாறு கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ், தில்லை நடராசா அரசைக் கோரியுள்ளார்.

வவுனியாவில் இராணுவ இணைப்பதிகாரி மற்றும் அரச உயரதிகாரிகளுடனும் அவர் இது தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். அரசிடம் இருந்து இது தொடர்பாக எந்தவித பதிலும் நேற்று முன்தினம் வரை கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## விளையாட்டு அதிகாரிகள் பதவி ஆட்சேர்ப்பு ரத்து

திருகோணமலை, டிச. 28

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள விளையாட்டு அதிகாரிகள் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான திட்டம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி ஆட்சேர்ப்பு பற்றிய விளம்பரம் வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சினால் கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் கடந்த நவம்பரில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அதற்கான விண்ணப்ப தினம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பது பற்றிய விளம்பரம் 'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

தற்போது மேற்படி ஆட்சேர்ப்புக்கான திட்டம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக வடக்கு, கிழக்கு மாகாண கல்வி, கலாசார விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அறிவித்திருப்பதாக அறியவருகின்றது.

மேற்படி பதவிக்கு பணம் செலுத்தி விண்ணப்பித்தோருக்கு அப்பணம் மீளளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மட்டக்களப்பில் தீவிர தேடுதல்

மட்டக்களப்பில் ஸ்ரீலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிரான், சித்தாண்டி, சந்திவெளிப் பகுதிகளில் சல்லடை போட்டு தேடுதல் நடத்திவருவதாகவும் —

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து அந்தப் பகுதிகளில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## வவுனியாவில் முகாமில் சிறைவாழ்க்கை

கொழும்பு, டிச. 28

வடக்கில் இருந்து கொழும்பு செல்வதற்காக வவுனியா வருபவர்கள் சிறை வைக்கப்பட்டது போன்று தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் இருந்து கொழும்பு மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலைக்கு செல்வதற்காக வவுனியா வருவோரால் அங்குள்ள தற்காலிக முகாம் நிரம்பி வழிவதாகவும்—

அங்கு தங்கியுள்ளவர்கள் வெளியே சென்று வருவதற்கு முன்னர் தினமும் 2 மணித்தியாலங்கள் ஒதுக்கிக் கொடுத்திருந்த படையினர் தற்போது அந்த வசதியை நிறுத்தியுள்ளனர் என்றும்—

அதனால் அங்குள்ளவர்கள் சிறை வைக்கப்பட்ட நிலையில் உள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுருத்த சமீபத்தில் குருவாயூர் சென்றது ஏன்?

கொழும்பு, டிச. 28

விடுதலைப்புலிகளின் நான்கு தற்கொலைப் போராளிகளின் கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பியதுக்காகவே பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த சமீபவத்தில் குருவாயூர் சென்று நேர்த்திக் கடனை நிறைவேற்றினாராம்.

அனுருத்த ரத்வத்த தமது பாரியார் ரமணி ரத்வத்தையுடன் அண்மையில் கேரளாமாநிலத்தின் குருவாயூர் ஆலயத்துக்கு சென்றிருந்தது தெரிந்ததே. (இ-3)

## புலிகளின் கருத்துக்களை பிரசுரிக்க முடியாதுள்ளது

### பெரும் குறை என்கிறது "திவயின"

விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நடக்கும் மோதல்கள் பற்றி விடுதலைப் புலிகளின் கருத்து களை பிரசுரிக்க முடியாதிருப்பது பெரும் குறைபாடு ஆகும் என்று ''திவயின'' ஞாயிறு இதழ் ஆசிரியர் காமினி சுமணசேகர தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் தகவல்களை பெற பலமுறை தொடர்பு கொண்டும் இயலாது போனதும் இதற்குக் காரணம் என்றும்—

விடுதலைப் புலிகளிடம் இருந்து விவரங்கள் கிடைப்பின் அவற்றை பிரசுரிக்க தாங்கள் தயார் என்றும்—

இருதரப்பின் தகவல்களையும் மக்களுக்கு வழங்கவேண்டியது தமது கடமையும், பொறுப்பும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

### பிரதேச செயலகம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் உள்ள ஒரு பிரதேச செயலகத்துக்கும்—

கிழக்கு மாகாணத்தில் உள்ள 6 பிரதேச செயலகங்களுக்கும் — இனி நேரடியாக நிதி அனுப்பப்படமாட்டாது என்று தெரிவிக்கப் படுகிறது.

மாவட்ட அரச அதிபர்களுக்கு அந்த நிதி அனுப்பப்படும் என்றும்—

மாவட்ட அரச அதிபர்கள் ஊடாகவே பிரதேச செயலகங்கள் அந்த நிதியைப் பெறவேண்டி இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### கிளாலிப் படகுச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளது.

இதன்பிரகாரம் வன்னி சென்று குடியிருக்க விரும்பும் மக்கள், அந்தப் பிரதேசப் பொறுப்பாளருடைய உறுதிப்படுத்தல் கடிதத்துடன் சென்றால் மட்டுமே இலவசப்பயணத்திற்கான அனுமதியும் ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை, நெல்லியடி, பிரதேசங்களிலுள்ள அரசியல்துறைச் செயலகங்களில் இந்த அனுமதிக் கடிதத்தினைப் பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே வன்னி சென்று குடியிருக்க விரும்பும் மக்கள் இந் நடைமுறையை கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். — என்றுள்ளது. (இ-3)

### ஓய்வூதியம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் பீ. ஆரிய சமரவீர அனைத்துமாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

குறித்த காலப்பகுதியில் உயிருடன் இருந்து தற்போது இறந்த ஓய்வூதியரின் நிலுவைப் பணம் அவரின் பின்னுரித்தாளருக்கு வழங்கப்படும் எனவும் அவர் பணித்துள்ளார். (இ-3-6)

### வலிகாமம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

இத் தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதம் குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை புத்தூர் பகுதியில் நேற்று மாலை படையினரின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

முன்னணிக் காவலரண்களை ஊடுருவி புலிகள் தாக்கியதை அடுத்து அப்பகுதியில் நீண்ட நேரம் கடும் மோதல் இடம்பெற்றது.

அளவெட்டிக்குச் சமீபமாகப் பன்னாலைப் பகுதியில் படையினர் நிலைகள் மீதும் புலிகள் நேற்று தாக்குதல் நடத்தினர்.

முன்னணிக் காவலரண்களை ஊடுருவி வந்த விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை நெருங்கி சிங்களத்தில் உரையாட முற்பட்டதாகவும் —

அவர்களில் ஒருவர் படையினரின் பதுங்குகுழி ஒன்றினுள் ஊடுருவிச் சென்றதை அவதானித்த படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இத் தாக்குதல்களில் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. எனினும் அது குறித்து பாதுகாப்பு அமைச்சு விவரம் எதனையும் வெளியிடவில்லை. (ஐ-3-6-7-15)

## பதவி உயர்வு பரீட்சை

பொது எழுது வினைஞர் சேவை வகுப்பு 2 தரம் 'அ' வுக்கான பதவி உயர்வுப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்

இதற்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெற்றதும் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படுமென கிளிநொச்சி கலவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை குலேந்திரன்

(Sub Inspector of School Works, Education Dept - Jaffna)

துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிற்றம்பலம் வேலுப்பிள்ளை (கூட்டுறவு பரிசோதகர்) திருமதி குலரத்தினம் அவர்களின் சிரேஸ்ட புத்திரன் வேலுப்பிள்ளை குலேந்திரன் அவர்கள் 24-12-95 ஆம் திகதி அன்று காலமாகி விட்டார்.

அன்னார் திருமதி விஜயகுமாரி (கணக்கு பதிவாளர், கல்வித் திணைக்களம், யாழ்.) அவர்களின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28-12-95 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(39716)

### வயிரவநாதர் கிருஸ்ணராஜா

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாக உத்தியோகத்தர்)

தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வயிரவநாதர் — சின்னத்தங்கம் தம்பதிகளின் ஏகபுத்திரன் கிருஸ்ணராஜா 27 - 12 - 95 இல் காலமானார்.

இவர் நாகேஸ்வரியின் [குஞ்சு] அன்புக் கணவரும், சதீஸ், சஞ்சீவ், சுஜீவ் (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்), காலஞ்சென்ற றஜீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி, கமலாதேவி, தங்கேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரசானந்தராஜா, சிவநேசன், நகுலேஸ்வரன், நாகலிங்கம், நாகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27- 12- 95 பிற்பகல் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்

தற்போதைய முகவரி:-
திருமதி கிருஸ்ணராஜா நாகேஸ்வரி
C/o திருமதி சிவநாதன் யோகேஸ்வரி
புதுத்தோட்டம் வீதி,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

(39714)

### இராமுப்பிள்ளை இராசரத்தினம்

கொக்குவில் மேற்கு அரசடியை பிறப்பிடமாகவும், தற்போது நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இ. இராசரத்தினம் நேற்று (27 - 12 - 95) மாலை காலமானார். இவர் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், நடராசா (நிறைவேற்று பொறியியலாளர் யாழ்ப்பாணம்), பாலசுப்பிரமணியம் (வ. பி. போ. சபை கோண்டாவில்), இந்திரலிங்கம் (வ. பி. போ. சபை தலைமை செயலாளர்), இராசலட்சுமி, தியாகலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ஜெகதீஸ்வரி நடராசா (ஆசிரியர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலம்), திலகவதி (தயா), சொர்ணகாந்தி, கணேசமூர்த்தி (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காவேரி, கயனி, சிந்துயன், சியாந்தன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-12 95) காலை 11 மணியளவில் அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இந்திரலிங்கம் (மகன்)

தற்போதைய முகவரி:
C/o திருமதி சொ. கணபதிப்பிள்ளை (ஆசிரியர்)
கண்டி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(39715)

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை

### இறைச்சிக் கடைகள் பற்றிய

# கேள்வி அறிவித்தல் - 1996

இப்பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக் கடைக் குத்தகை (03-01-1996 முதல் 31-12-1996 வரை) 02-01-1996 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு இச் சபையின் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் வழங்கப்படும். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 02-01-1996 முற்பகல் 10 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகத்தில் அட்டவணையில் காட்டப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தி பெயரைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். ஏற்றுக்கொள்ளப்படுபவர் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு சகல கட்டுப்பணங்களையும் செலுத்திய பின்னரே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

| இறைச்சிக்கடையின் பெயர் | பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| 1. உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | ரூ. 1000/- | ரூ. 42,500/- |
| 2. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | ரூ. 500/- | ரூ. 15,000/- |

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

22-12-1995.

(சி/3094)


# தெளிவான போட்டோ பிரதிகளுக்கு

★ ஸ்கைலைன்ஸ் ★

யாழ். நகரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது
இல. 09, நவீன சந்தை, மேல்மாடி (உட்புறம்) சாவகச்சேரியில்
இயங்குகின்றது

(சி-2923)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 28-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org